TAMIL

AEC
Australian Electoral Commission

# நில், கவனி

## இந்த ஃபெடரல் தேர்தலின் மூலாதாரத்தைப் பரிசீலிக்கவும்

இந்த ஃபெடரல் தேர்தல் காலத்தில் உங்கள் வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் பாரிய அளவிலான தகவல்கள் பரவ விடப்படுகின்றன. நீங்கள் பார்க்கின்ற, கேட்கின்ற மற்றும் வாசிக்கின்றவற்றைக் கவனமாகப் பார்க்கவும். தகவல்கள் தொடர்பாக உங்களுக்கு சந்தேகங்கள் இருப்பின் உங்களது சுயமான கருத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளவும் உதவக் கூடிய சில கேள்விகள் உள்ளன.

## ஒரு வாக்காளர் என்ற வகையில் உங்களது பங்கு

தகவலின் பின்வரும் தன்மைகள் பற்றி நிதானமாகக் கவனிக்கவும்:

### நம்பகத்தன்மை

**அது ஒரு நம்பகமான அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க மூலத்திலிருந்து வருகின்றதா?**

தகவலின் மூலத்தை நீங்கள் அறிவீர்களா? அது அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஊடகம் வாயிலாக அல்லது உறுதிப்படுத்தப்பட்ட சமுக ஊடகக் கணக்கொன்றிலிருந்து வந்ததா? தகவல் பரிமாற்றங்களை தேர்தல் சட்டங்கள் கட்டுப்பாட்டுக்குட்படுத்துவதில்லை.

### தற்போதையது

**அது எப்போது வெளியிடப்பட்டது?**

ஒரு இடுகை/கட்டுரை இன்றுதான் பகிரப்பட்டிருந்தாலும் அது நிகழ்காலத்திற்குரியதாகும் என்ற அர்த்தமல்ல. எப்போதும் அசல் மூலாதாரத்தையும் வெளியீட்டுத் திகதியையும் பரிசீலிக்கவும்.

### பாதுகாப்பானது

**அது ஒரு ஏமாற்று வேலையாக இருக்க முடியுமா?**

சமூக ஊடகங்களில் அல்லது வேறு டிஜிட்டல் தளங்களில் பரிமாறப்படும் தகவல்களின் உள்ளடக்கம் அல்லது மூலம் தொடர்பாக உங்களுக்கு சந்தேகங்களிருந்தால் அவற்றில் ஈடுபாடு கொள்ளும் முன்பதாக கவனமாக சிந்திக்கவும்.

முடியுமாயின், தகவல்களின் மூலாதாரத்துடனான தொடர்பு விபரங்களை பரிசீலித்துக் கொள்வது நல்லது.

## AEC யின் பொறுப்பு

ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையம் (AEC) ஃபெடரல் தேர்தலை நடத்தும் பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஒரு சுதந்திரமான நிறுவனமாகும். AEC யின் பொறுப்பில் உள்ளவை:

**தேர்தல் முறைமை பற்றிய நம்பத்தகுந்த தகவல்களை வழங்குதல்**

எவ்வாறு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்தல், வாக்களித்தல் அல்லது ஒரு வேட்பாளராகப் போட்டியிடல் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான இலகுவான வழிகளை AEC தனது விளம்பரப் பிரச்சாரங்கள், வலைத்தளம், தொடர்பு மையம் மற்றும் சமூக ஊடகக் கணக்குகள் வாயிலாக வழங்குகிறது.

இத்தேர்தல் முறைமைகள் தொடர்பான பிழையான தகவல்கள் ஏதுமிருப்பின் அத்தகைய பதிவுகளை சரிசெய்ய AEC நடவடிக்கை எடுக்கும். இத்தேர்தல் முறைமைகளுக்கு அப்பாற்பட்டு – தேர்தல் தொடர்பாடல்களின் உண்மைத் தன்மைகளைப் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பு AEC யிற்கு இல்லை.

**தேர்தல் தொடர்பாடல்களின் அதிகாரங்களை விசாரித்தல்**

தகவல்களின் மூலங்களை அறிந்து கொள்ள உங்களுக்கு உதவ, குறித்த சில தேர்தல் சம்பந்தப்பட்ட தொடர்பாடல்கள் அதிகாரமளிப்புக்கு உட்பட்டிருக்க வேண்டிய தேவைகள் உள்ளன. முறைப்பாடுகள் கிடைத்ததும், முறையாக அதிகாரமளிக்கப்படாத தேர்தல் சம்பந்தப்பட்ட தொடர்பாடல்களை AEC விசாரிக்கும்.




**aec.gov.au** 13 23 26


கேன்பராவிலுள்ள ‘தேர்தல் ஆணையர்’ அவர்களால் அதிகாரமளிக்கப்பட்டது
Authorised by the Electoral Commissioner, Canberra